அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641 043

முதுகலை பருவத்தேர்வு – நவம்பர் 2017

மூன்றாம் பருவம்

**Class : II PG** **Time : 3 Hrs**

**Major : Tamil** **Max. Marks: 60**

**12MTMC18 - சிற்றிலக்கியம்**

பகுதி-அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி **(10x1/2=5)**

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1) "மூவராய் மூவர்க்குண் முதல்வனாய் நின்றோய்" - யார்?

அ. சிவன் ஆ. திருமா்ல் இ. பிரம்மன் ஈ. இந்திரன்

2) "உணங்கும் திருமுன்றிலாய் மறைநான்கும் உரைப்பவள்"

அ. கலைமகள் ஆ. அலைமகள் இ. நிலமகள் ஈ. திருமகள்

3) இடியோசை கேட்ட எதைப்போல போல, பாண்டியனின் படையோசை கேட்ட பகைவர்கள் ஓடினர்

அ. நாகம் ஆ. காகம் இ.மயில் ஈ. குயில்

4) சிறிய திருமடலை இயற்றியவர்

அ. ஆண்டாள் ஆ. திருமங்கையாழ்வார் இ. நம்மாழ்வார் ஈ. பூதத்தாழ்வார்

5) திருகூட ராசப்பர்க் கவிராயர் படைத்த சிற்றிலக்கியம்

அ. கலம்பகம் ஆ. தூது இ. பிள்ளைத்தமிழ் ஈ. குற்றாலக்குறவஞ்சி

6) "ஆதிமறை நான்கையும் நாலாயிரத்து நற்கவியாய் ஓதும் பதினொருவர் உள்ளத்தான" - யார்?

அ. முருகன் ஆ. சிவன் இ. திருமால் ஈ. உருத்திரன்

7) கிள்ளை விடுதூது பாடியவர்

அ. பலபட்டைச் சொக்கநாதப்புலவர் ஆ. கபிலர்

இ. குமரகுருபரர் ஈ. தாயுமானவர்

8) சரசுவதி அந்தாதி யாரால் பாடப்பட்டது?

அ. திருத்தக்கத் தேவர் ஆ. ஒட்டக்கூத்தர் இ. வீரமாமுனிவர் ஈ. கம்பர்

9) போர்க்களத்தைப் பற்றிப் பாடப்படும் சிற்றிலக்கியம்.

அ. பிள்ளைத்தமிழ் ஆ. பரணி இ. கலம்பகம் ஈ. தூது

10) கொங்குமண்டல சதகத்தின் ஆசிரியர்

அ. கொங்குவேளிர் ஆ. செரக்கநாதப்புலவர் இ. வீரமாமுனிவர்

ஈ. கார்மேகக் கவிஞர்

## பகுதி —ஆ

**பின்வரும் வினாக்களுக்கு 200 சொற்களில் விடை தருக (5x4=20)**

11) அ திருவரங்கக் கலம்பகம் காட்டும் தலைவியின் இரங்கலை விவரி

(அல்லது)

ஆ எத்தகு தவம் சிறந்தது எனக் கலம்பக ஆசிரியர் உரைக்கின்றார்?

12) அ வருத்தும் வாடையை முத்தொள்ளாயிரம் எவ்வாறு காட்சிப்படுத்துகின்றது?

(அல்லது)

ஆ முருகனை செங்கீரை ஆடி அருளுமாறு பிள்ளைத்தமிழ் ஆசிரியர் எவ்வாறு வேண்டுகிறார்?

13) அ கலைமகளின் ஞானவடிவை அந்தாதி எவ்வாறு போற்றுகின்றது?

(அல்லது)

ஆ திருமங்கையாழ்வார் சுட்டும் அவதாரங்களை விவரி.

14) அ சுந்தரருக்கு விருந்து அளித்த வரலாற்றைக் கொங்கு மண்டல சதகம் எவ்வாறு காட்டுகின்றது?

(அல்லது)

ஆ அழகரின் தசாங்கத்தைக் கிள்ளை விடுதூது எவ்வாறு எடுத்துரைக்கின்றது?

15) அ போர்க்களத்தில் கண்ட அற்புதக் காட்சிகளாகக் கலிங்கத்துப்பரணி எவற்றைக் குறிப்பிடுகின்றது?

(அல்லது)

ஆ குறவஞ்சி நாடகக் காட்சியை விவரி.

## பகுதி-இ 5x7=35

**அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்குமிகாமல் விடைதருக.**

16) அ திருவரங்கக் கலம்பகத்தில் தூது விடுத்தலைப் பற்றி ஆசிரியர் யாது கூறுகின்றார்?

(அல்லது)

ஆ திருவரங்கக் கலம்பகத்தில் அகத்திணை மரபுகள் எவ்வாறு புனையப்பட்டுள்ளன?

17) அ பாண்டிய மன்னனின் பெருமைகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழில் வருகை, அம்புலிப் பருவங்களை விளக்குக.

18) அ கம்பரின் கவிச்சுவையைச் சரசுவதி அந்தாதி வழி புலப்படுத்துக.

(அல்லது)

ஆ சிறிய திருமடலில் பேசப்படும் அகத்துறை மரபுகளைத் தொகுத்துரைக்க.

19) அ கொங்குநாட்டுத் திருத்தலங்களின் பெருமைகளைக் கொங்குமண்டல சதகத்தின்வழி நின்று விரித்துரைக்க.

(அல்லது)

ஆ அழகர் மேல் காதல் கொண்ட தலைவி கிளியை விளித்துரைத்த செய்திகளை எழுதுக.

20) அ செயங்கொண்டாரின் கவித்திறனைக் கலிங்கத்துப்பரணி களம் பாடியது வழி நிறுவுக.

(அல்லது)

ஆ இறைவனின் திருவுலாவைத் திருக்குற்றாலக் குறவஞ்சி எவ்வாறு புனைந்துரைக்கின்றது?

********